# தடம்

# THADAM

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி 2015

J/CHAVAKACHCHERI HINDU COLLEGE CHAVAKACHCHERI Jan - April. VOLUME 8 ISSUE 1


## எமது கல்லூரியின் புதிய அதிபராக திரு. நடராசா சர்வேஸ்வரன் அவர்கள் பதவியேற்பு.





எமது கல்லூரியின் பழைய மாணவரும் இலங்கைக்கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவரும் மண்ணின் மைந்தரும் இளமையும் வளமையும் அறிவும், ஆற்றலும் நிரம்பியவருமான திரு.நடராசா சர்வேஸ்வரன் அவர்கள் எமது கல்லூரியின் புதிய அதிபராக 23.02.2015 அன்று பதவியேற்றுப் பணிபுரிந்து வருகின்றார். அவரை வருக வருக என்று கல்விச் சமூகம் அகமகிழ்வுடன் வரவேற்கின்றது. கல்லூரியின் 19ஆவது அதிபர் வரவேற்பு நிகழ்வினை 24.02.2015 இல் கல்லூரிச் சமூகம் நடாத்தியது.

## நிறுவுநர் நாளும் தாமோதரன் சஞ்சிகை வெளியீடும் – 2015





கல்லூரியின் நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளை அவர்களை நினைவுகூரும் விதமாக ஆண்டுதோறும் நடைபெறும் கல்லூரி நிறுவுநர் நாள் நிகழ்ச்சியும் அதனுடன் இணைந்ததாகக் கல்லூரியின் தாமோதரன் வருடாந்த சஞ்சிகை வெளியீடும் இவ்வருடமும் 05.02.2015 வியாழக்கிழமை கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் கல்லூரியின் பிரதி முதல்வர் திரு.ந.பாலச்சந்திரன்

அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவின் முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்களுக்குப் பதிலாக திரு.ந.தெய்வேந்திரராஜா (மாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.கிருஷ்ணகுமார் அவர்கள் கலந்து கொண்டார். கல்லூரி நிறுவுநர் நினைவுப் பேருரையை பேராசிரியர்.தி.வேல்நம்பி அவர்கள் நிகழ்த்தினார். அவரது உரை "வணிக நிறுவனங்கள் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும் - யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட ஒரு பார்வை" என்னும் தலைப்பில் அமைந்திருந்தது. தாமோதரன் சஞ்சிகை யினை முதன்மை விருந்தினர் வெளியிட்டு வைக்க சாவகச்சேரிக் கோட்டக்கல்வி அலுவலர் திரு.கு.சிவானந்தம் அவர்கள் ஆய்வுரையினை வழங்கினார். விருந்தினர்கள் தமது உரைகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் படிப்படியான வளர்ச்சி யையும் அதற்காக அர்ப்பணித்த ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகியோரின் உழைப்பையும் பாராட்டியதுடன் தூர நோக்குடன் இத்த கையதொரு கல்வி விருட்சத்தை உருவாக்கிய நிறுவுநர் அமரர்வி.தாமோதரம்பிள்ளை அவர்களின் தூய பணியையும் போற்றினார். நன்றியுரையுடன் விழா இனிது நிறைவு பெற்றது.

## எமது முன்னாள் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் மணிவிழா



**எ**மது கல்லூரியில் 2004.07.15 முதல் 02.02.2015 வரை அதிபராக அரிய பணியாற்றித் தமது 60ஆவது அகவை நிறைவில் ஓய்வு பெற்ற உயர்திரு.அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களது மணிவிழா 22.02.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் பிரதியதிபர் திரு.ந.பாலச்சந்திரன் அவர்களின் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. சங்கத்தானை முருகன் ஆலயத்திலிருந்து விழா நாயகரையும் துணைவியாரையும் மலர்மாலைகள் சூட்டி மங்கல வாத்தியங்கள் முழங்க கல்லூரிச் சமூகத்தினர் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்து வந்தனர். இறைவணக்கம், கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம், பாடசாலை அபிவிருத்திக் குழுச் செயலாளர் திரு.ஆ.தங்கவேலு அவர்களின் வரவேற்புரை, சிவஸ்ரீ.சி.சிதம்பரநாதக் குருக்களின் ஆசியுரை ஆகியவற்றைத் தொடர்ந்து பிரதி அதிபர் அவர்கள் தமது தலைமையுரையினை நிகழ்த்தினார். ஓய்வுபெற்ற அதிபரின் கல்விசார் தகைமைகள் அவர் எமது கல்லூரியில் ஆற்றிய பணிச்சிறப்புக்கள் அவரது கண்ணியமான அணுகு முறைகள் ஆகியவற்றை விழாத் தலைவர் சுட்டிக் காட்டினார். தொடர்ந்து 'கயிலை வாசம்' மலர் வெளியீடு இடம்பெற்றது. வெளியீட்டு ரையினைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதியதிபர் திரு.ச.லலீசன் அவர்கள் சுவையுற நிகழ்த்தினார்.

வாழ்த்துரைகளைக் கல்லூரிச் சமூகத்தினரும் கல்விப் புலத்தினருமாகிய பல்துறையினர் வழங்கிப் பெருமைப்படுத்தினர். வடமாகாணக் கல்வியமைச்சர் கௌரவ.த.குருகுலராசா, வடமாகாண சபை உறுப்பி னர்கள் கௌரவ ப.அரியரத்தினம், கௌரவ கே.சஜந்தன் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி.சிறீதரன், பேராசிரியர்கள் ப.புஸ்பரத்தினம், பொ.பாலசுந்தரம்பிள்ளை, க.கந்தசாமி, கா.குகபாலன், மற்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.கிருஷ்ணகுமார் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.இராஜேந்திரன், வடமாகாணக் கல்விப் பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் முன்னாள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.வ.செல்வராசா எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.இ.கயிலைநாதன் ஏனைய கல்லூரிகளின் அதிபர்கள் திரு.க.அருந்தவபாலன், திரு.சி.சிவநேஸ்வரன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் திரு.வ.ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரிய சகோதரத்துவத் தலைவர் திரு.க.ஜெயவீரசிங்கம் ஆகியோர் எமது முன்னாள் அதிபரின் பணிகளையும் ஆற்றல்களையும் அருங் குணங்களையும் பாராட்டி வாழ்த்திப் பேசினர். மணிவிழாவில் விழாத் தம்பதியினரைக் கௌரவிக்கும் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. மலர்மாலைகள், சந்தன மாலைகள், பொன்னாடைகள் ஆகியன சூட்டியும் மலர்ச் செண்டுகள் வழங்கியும் எமது அதிபர் தம்பதியினர் பெருமைப்படுத்தப்பட்டனர். வாழ்த்துப் பாமாலைகளும் பாடி வழங்கப்பட்டன. அன்பளிப்புகளும் அளிக்கப்பட்டன. வண்ண ஓவியங்களாக எமது கல்லூரி ஆசிரியர்

செ.செல்வரமணன் வரைந்த முன்னாள் அதிபர்களின் உருவப்படங்களை மணிவிழா நாயகனும், ஏனைய விருந்தினர்களும் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

## நவீன கலையரங்கத்துக்கான அடிக்கல் நாட்டு விழா - 2015



எமது கல்லூரியில் அமையவிருக்கும் நவீன கலையரங்கத்துக்கான அடிக்கல் நாட்டு விழா 23.01.2015 வெள்ளிக்கிழமை கல்லூரி முதல்வர் திரு.அ.கயிலயாபிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந் தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பௌதிக வியற்துறை சிரேஷ்ட பேராசிரியர் திரு.க.கந்தசாமி அவர்களும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.கிருஷ்ணகுமார் அவர்களும் கலந்து கொண்டனர். இறைவணக்கம், பிரதியதிபர் திரு.ந.பாலச்சந்திரன் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வு அதிபர் அவர்களின் தலைமையுரை, பிரதம விருந்தினர் உரை, சிறப்பு விருந்தினர் உரை ஆகியன நிகழ்ந்த பின் சுபவேளையில் கலையரங்குக்கான அடிக்கல் விருந்தினர்களால் நாட்டப்பட்டது. இக்கலையரங்க முயற்சியானது ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சுவிஸ், நோர்வே, கனடா ஆகிய நாடுகளில் வதியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் நிதியுதவியுடனும் எமது நாட்டிலுள்ள கல்லூரியின் பெற்றோர், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள், ஆகியோரின் உதவியுடனும் நிறைவு பெற விரும்பிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## <u>ஆசிரியர் மாணவர் நலனோம்பு நிலையத் திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் மேலைத் தேய வாத்திய உபகரணங்கள் வழங்கலும்</u>

எமது கல்லூரியின் வளங்களை அதிகரிக்கும் நோக்கில்



எமது கல்லூரி ஆசிரிய மாணவர் நலனோம்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டுதல் நிகழ்ச்சியும் அதனுடன் இணைந்ததாக மேலைத்தேய வாத்திய உபகரணங்கள் வழங்கல் நிகழ்ச்சியும் 26.01.2015 திங்கட்கிழமை அன்று கல்லூரி வளாகத்தில் கல்லூரி முதல்வர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் கௌரவ திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.கிருஸ்ணகுமார் அவர்கள் கலந்து கொண்டார்.

## தொழில் நுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழா




ஆயிரம் இடைநிலைப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 20 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத் திறப்பு விழா 26.02.2015 அன்று கல்லூரியின் புதிய அதிபர் திரு.ந.சர்வேஸ்வரன் தலைமையில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது. பிரதம விருந்தினராக வருகை தந்த கௌரவ இராஜாங்க அமைச்சர் திரு.வேலுசாமி இராதாகிருஷ்ணன் அவர்கள் புதிய கட்டிடத்தினை நாடா வெட்டி மங்களகரமாகத் திறந்த வைத்தார். நிகழ்வுக்கு மேலும் வருகை தந்தவர்கள் மகளிர் விவகார பிரதி

அமைச்சர் கௌரவ விஜயகலா மகேஸ்வரன், வடமாகாணக் கல்வியமைச்சர் கௌரவ த.குருகுலராஜா, யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுரேஷ் பிரேமச்சந்திரன் கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் டக்லஸ் நாணயக்காரவும் அமைச்சின் கல்விப்பணிப்பாளர் எல்.சிவராஜ் மற்றும் தமிழ்ப் பிரிவு பணிப்பாளர் எஸ்.முரளிதரன் வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்களும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆர்.இராஜேந்திரன் அவர்களும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். இராஜாங்க அமைச்சரின் வருகையினையொட்டி அவர்களினால் போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்றும், கற்றல் உபகரணங் களும் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. புதிய அதிபரின் தலைமையில் இடம்பெற்ற முதலாவது நிகழ்வு என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தரம் 10 வரலாறு வினாவிடை நூல் வெளியீட்டு விழா

எமது கல்லூரி ஆசிரியர் திரு.சீ.சுஜீகரன் அவர்களால் எழுதப்பட்ட தரம் 10 இற்கான வரலாறு வினா விடை நூலின் வெளியீட்டு விழா 23.02.2015 திங்கட் கிழமை கல்லூரியின் பிரதி அதிபர் திரு.ந.பாலச்சந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதி அதிபர் திரு.த.பாலசண்முகநாதன் அவர்கள் நூலினை வெளியிட்டு வைக்க பரந்தன் ஆசிரிய மத்திய நிலையத்தின் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி திரு.சு.வீரசுதாகரன் அவர்கள் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்ட பின் நூலின் ஆய்வுரையினை திருமதி.ப.இரத்தினசிங்கம் அவர்களும் வாழ்த்து ரையினை திரு.க.ஜெயவீரசிங்கம் அவர்களும் நிகழ்த்தினார்.

## குடிநீர் வழங்கல் நிகழ்வு




சுவிஸ் பழைய மாணவர் சங்கத்தினரால் கிட்டத்தட்ட பத்து லட்சம் ரூபா செலவில் வடிவமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கல் நிகழ்வு 13.03.2015 அன்று எமது பாடசாலையின் முன்னைநாள் அதிபர் திரு.அ.கயிலாயபிள்ளை அவர்களும் சுவிஸ் நாட்டின் பழைய மாணவர்கள் சார்பில் திரு.சிறீகாந்தன் அவர்களும் இணைந்து வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள் எல்லோரும் நல்ல குடிநீரைப் பருகி மகிழ்ந்தார்கள்.

# போட்டிகள் சாதனைகள்

## இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2015

எமது கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 13.02.2015 வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரியின் பிரதி அதிபர் திரு.ந.பாலச்சந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் முதன்மை விருந்தினராக எமது கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் திரு. அருணாசலம் கயிலாயபிள்ளை அவர்களும் அவரது பாரியாரான திருமதி திலகவதி கயிலாயபிள்ளை அவர்களும் கலந்து சிறப்பித்தனர். போட்டி நிகழ்ச்சிகள் நிறைவு பெற்ற பின் திருமதி .திலகவதி கயிலாயபிள்ளை அவர்கள் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் களை வழங்கிக் கௌரவித்தார்.

மேலும் இவ்வருடம் ஆனந்தா இல்லம் 227 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுக்



கொண்டது. ஏனைய இல்லங்களின் நிலைகள் பின்வருமாறு

| | |
|---|---|
| தாமோதரம் இல்லம் | 224 |
| நேரு இல்லம் | 188 |
| முத்துக்குமாரு இல்லம் | 170 |
| ஸ்ரீசுமங்கலா இல்லம் | 132 |

அஞ்சலோட்டத்திற்கான வெற்றிக் கிண்ணத்தை ஆனந்தா இல்லம் 56 புள்ளிகளைப் பெற்று முதலாம்

இடத்தைப் பெற்றது. அணிநடைப் போட்டிகளில் ஆண்கள் அணிகளில் ஆனந்தா, ஸ்ரீசுமங்கலா, முத்துக்குமாரு என்பன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன. பெண்கள் அணிகளில் ஆனந்தா, நேரு, ஸ்ரீசுமங்கலா ஆகியன முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

### சிறந்த வீரர் வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டோர்

| | | |
|---|---|---|
| 13 வயது | ஆண் | T.நிதர்சன் |
| | பெண் | K.கோவர்த்தனா |
| 15 வயது | ஆண் | T.கஜானன் |
| | பெண் | M.மந்திரரூபி |
| 17 வயது | ஆண் | L.கபில்சன், S.சதுர்சன் P.புவிதரன் |
| | பெண் | V.விதுஷா |
| 19 வயது | ஆண் | V.கோபிநாத் |
| | பெண் | S.தனுசிகா, T.நிருஷா, எஸ்.மதுசாலினி |
| 21 வயது | ஆண் | T.அஜிந்தன் L.பிரவீன் |
| | பெண் | B.துவாரகா |

வலய மட்டத்தில் நடைபெற்ற கிறிக்கெட் போட்டியில் எமது கல்லூரி 19 வயது ஆண்கள் அணி மூன்றாம் இடமும் கரப்பந்து போட்டியில் 19 வயது ஆண்கள் இரண்டாம் இடமும், 17 வயது பெண்கள் இரண்டாம் இடமும், வலைப்பந்து போட்டியில் 17 வயது பெண்கள் முதலாம் இடமும் 19 வயது பெண்கள் மூன்றாம் இடமும் பெற்று மாவட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

### பாடசாலை மட்ட சமூக விஞ்ஞானப் பொது அறிவுப் போட்டி

**தரம் 6**

சி.டிலக்சனா 1ஆம் இடம்
யோ.ரம்யராஜ் 2ஆம் இடம்
ச.மேனகன் 3ஆம் இடம்
இ.திலக்ஷன் 4ஆம் இடம்
ப.யதுஷிகா 5ஆம் இடம்
சி.வனோஜா 6ஆம் இடம்

**தரம் 7**

மு.அஷ்விஜன் 1ஆம் இடம்
இ.தவினுகன் 2ஆம் இடம்
தெ.கீர்த்திகன் 3ஆம் இடம்
மு.பானுஜன் 4ஆம் இடம்
ப.வீணஜா 5ஆம் இடம்
சி.கஜந்தன் 6ஆம் இடம்

தரம் 8

ச.மதுசனா 1ஆம் இடம்
சி.டினக்சன் 2ஆம் இடம்
வி.கேதுஷா 3ஆம் இடம்
வி.கம்சிகா 4ஆம் இடம்
சோ.வாகினி 5ஆம் இடம்
ச.சுபாங்கி 6ஆம் இடம்

தரம் 9

த.சுந்தர்பவன் 1ஆம் இடம்
சி.பாகிதன் 2ஆம் இடம்
வி.அஜந்தன் 3ஆம் இடம்
இ.ஆரூசன் 4ஆம் இடம்
இ.லக்சாயினி 5ஆம் இடம்
ப.சாஜிகா 6ஆம் இடம்

தரம் 10

சி.டனுஜன் 1ஆம் இடம்
தி.நிவேதன் 2ஆம் இடம்
இ.லோகிராஜ் 3ஆம் இடம்
ம.காங்காதீபன் 4ஆம் இடம்
த.தரணிகா 5ஆம் இடம்
கி.ஜங்கரன் 6ஆம் இடம்

தரம் 11

சி.அலோஜிகா 1ஆம் இடம்
கு.கம்சிகா 2ஆம் இடம்
க.நிதிலா 3ஆம் இடம்
த.லதிசனா 4ஆம் இடம்
சு.பிரியந்தி 5ஆம் இடம்
த.யஸ்மினா 6ஆம் இடம்

தரம் 12, 13


ஜெ.திவ்வியா 1ஆம் இடம்
க.தேனுகா 2ஆம் இடம்
ம.தயாளினி 3ஆம் இடம்
கு.ரதீபா 4ஆம் இடம்
எ.துஷ்யந்தி 5ஆம் இடம்
கி.கிரிஷாந்தன் 6ஆம் இடம்

### சைவசமயப் போட்டி

ஆசிரியர்களுக்கான மாலை கட்டுதல் போட்டி வலய மட்டத்தில் நடைபெற்ற போது எமது கல்லூரியின் நடன பாட ஆசிரியை திருமதி.ச.மகிந்தன் அவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

24.02.2015 இல் வலய மட்டத்தில் நடைபெற்ற சைவசமயக் கண்காட்சிப் போட்டியில் ச.லதுசிகன் (9A) 2ஆம் இடத்தையும், சி.வைஷ்ணுகா (7F) 3ஆம் இடத்தையும் கு.சாயிதா (10E) தேர்ச்சி நிலையினையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

## சேவை நயப்பும் பிரிவுபசாரமும்



18.03.2015 அன்று ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர் திரு.க.ஜெயவீரசிங்கம் அவர்கள் உயர்தர இடைநிலை வகுப்புக்களில் ஆங்கில மொழிப் பாடத்தைச் சிறப்பான முறையில் கற்பித்தவர். எமது கல்லூரியின் ஆசிரியர் சகோதரத்துவத்தின் தலைவராக இருந்து பல செயற்றிட்டங்கள் சிறப்புற

அமைவதற்காக முன்னின்று உழைத்தவர். தான் எடுத்த கருமத்தில் சிறிதும் தளராது நின்று திறம்பட பணியாற்றும் தனித்துவம் மிக்கவராக விளங்கியதோடு ஆசிரியர் களிடத்தும் மிக்க நட்புரிமையோடும் அன்புடனும் பழகும் இனிய சுபாவம் உள்ளவராகவும் விளங்கியவர். நிறைந்த ஆங்கிலப் புலமை வாய்ந்தவரான இவர் மாணவர் அனைவரது கல்வி உயர்வுக்கு உறு துணையாக இருந்த பெருந்தகையாவார். கல்லூரிப் பணிகளிலே தன்னை அர்ப்பணித்த ஆசிரியர் அவர் களது ஓய்வு காலம் சிறப்பானதாகவும் மகிழ்ச்சியா னதாகவும் அமைய வேண்டும் என தடம் செய்தி யேட்டினூடாக வாழ்த்துகின்றோம்.

## பௌதிக வள விருத்தி

24.03.2015 க.பொ.த (உ/த) மாணவர்களுக்கான குழுச் செயற்றிட்டம் அடிப்படையில் குழுவாகப் பல வேலைத்திட்டங்கள் கலை, வர்த்தக, தொழில்நுட்பத் துறையைச் சார்ந்த மாணவர்கள் 18 குழுக்களாகப் பிரிந்து பல வேலைத்திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் சிறந்த செயற்பாடாக பாவனைக்கு உதவாத தளபாடங்களை தளபாடத் திருத்தங்கள் மேற்கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டு பாவனைக்கு உகந்தவையாக வடிமைக்கப்பட்டமை பாராட்டத்தக்க விடயமாகும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமதுகல்லூரியின் ஆசிரியர்களான திரு.க.உதயசந்தர் (பௌதிகவியல்) திரு.வே.ஞானசம்பந்தன் (தமிழ்) ஆகியோர் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் நியமனம் பெற்றுள்ளனர். திரு.க.உதயசந்தர் அவர்கள் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியிலும் திரு.வே.ஞானசம்பந்தன் அவர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் விரிவுரையாளர்களாக பொறுப்பேற்றுள்ளனர். இவர்கள் எமது கல்லூரிக்கு ஆற்றிய சேவையைப் போற்றுகின்றோம்.

## இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்

திருமதி.கௌரி சுதாகரன் அவர்கள் எமது கல்லூரியில் 25.05.2011 முதல் கணித பாட ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவர் இரண்டாம் நிலைப் பிரிவு மாணவர்களின் கணித பாட அறிவின் முன்னேற்றத் திற்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. இவர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். சென்ற இடத் திலும் இவரது சேவை சிறந்து விளங்கவும், எல்லா நலன்களும் பெற்று சிறப்பாக வாழவும் வாழ்த்துகின்றோம்.

## வரவேற்கின்றோம்

எமது கல்லூரியில் புதிதாக இணைந்து கொண்ட ஆசிரியர்களை இன்முகத்தோடு வரவேற் கின்றோம். அவர்களது உயர்ந்த அர்ப்பணிப் பான சேவையினால் எமது கல்லூரி மேலும் சிறப்படைய வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| திரு.ப.தனசங்கர் | திரு.த.சிவறஜீவ் |
| திரு.த.சத்தியரூபன் | செல்வி.ச.நிருஜா |
| செல்வி.ப.கணேசமூர்த்தி | திருமதி.லோ.சிவாநிதி |
| திருமதி.ச.காயத்திரி | திருமதி.சு.கௌசலா |

## English day

We have received the circular from the Zonal Education department about Englishday competition 2015. The students were informed about the tcompetition and we have planned to conduct the school level competition during the second term.

### Won First Place



Miss.M.Keethanjali of grade 9D participated in the National Level Recitation competiton conducted by the Cultural Ministry won the 1st place. The prize giving was held on 28th February at the Museum auditorium.

### Special Coaching classes

Special coaching classes for grade 11 students were started during the frist term. The students who got below 40 marks were selected for the classes.

### G.C.E O/L - 2014

Our school results for G.C.E O/L has increased in 2014. Eight of our students got 9A's, eight of our students got 8A's, twelve of our students got 7A' s, eight of our students got 6A's and fourteen of our students got 5A's and all together 51 students got the best results.

The number of students and the percentage of the students are as follows.

| Subjects | Sit | Pass |
|---|---|---|
| Hindusim | 195 | 100% |
| RC | 02 | 100% |
| NRC | 01 | 100% |
| Tamil | 198 | 97.47% |
| English | 198 | 72.73% |
| Maths | 198 | 89.90% |
| History | 198 | 96.97% |
| Science | 198 | 81.82% |
| Bussiness stu | 140 | 96.43% |
| Geography | 24 | 100% |

| | | |
|---|---|---|
| Citizenship.Ed | 34 | 91.18% |
| Music | 28 | 100% |
| Art | 04 | 100% |
| Dance | 14 | 100% |
| English Lit | 28 | 100% |
| Tamil Lit | 26 | 100% |
| Dram & Thea | 98 | 100% |
| ICT | 54 | 98.15% |
| Agriculture | 29 | 100% |
| Home Science | 12 | 91.67% |
| Health Science | 102 | 99.02% |

The percentage of english results has increased by 72.73 this year. 27 students got 'A' passes. 13 students got 'B' passes.

I wish the students who got the best results and also I thank the teachers for the better performance.

## The students who got 9A's





M.Keethananth R. Vigani R .Mathusha





V. Mathanika S.Shobana M.Surthika




S. Menaka T. Piratheepan

1 Mahendran Keethananth 9A
2 Thanapalu Piratheepan 9A
3 Ravikumar Vigani 9A
4 Raveendran Mathusha 9A
5 Vijayathasan Mathanika 9A
6 Sivanantham Shobana 9A
7 Matharanayagampillai Surthika 9A
8 Sivarasa Menaka 9A
9 Puvanenthiran Methulan 8AB
10 Kanasekaram Thilaksan 8AB
11 Sritharan Miromina 8A B
12 Mouleeswaran Mydrejan 8A B
13 Sinnaththampy Gobika 8A B
14 Sivarajah Sangavi 8A B
15 Rajakulasingam Thadshajini 8AC
16 Jeyaganesan Jeyatharani 8AC
17 Nakuleswaran Varnaraj 7A 2B
18 Arumugam Sarangan 7A 2B
20 ThangarasaThasitha 7A 2B
21 Sinnaththamby Thenusha 7A 2B
22 Balachchanran Thinusan 7A B C
23 Yoganathan Anojan 7A BC
24 Sivasubramaniyam Elankumaran 7ABC
25 Sivaanbu Jananthan 7ABC
26 Sivarajah Jalini 7ABC27
27 Rajaratnam Piratheep 7ABS
28 Kanagathurai Tharsan 7A2C
29 Thanabalsingam Mithula 7A 2C
30 Chandran Thesikan 6A 2B C
31 Nagarajah Kopisankar 6A 2B C
32 Sathiyaseelan Sankarjee 6A 2B C
33 Sugamaran Abithan 6A 2B C
34 Pararajasekaram Kajani 6A 2B C
35 Ratnasapabathi Abinaya 6A 2B C
36 Manokaran Ajithkaran 6A B 2C
37 Raveendran Mathura 6A B 2C
38 Thamaraichselvan shanusan 5A 3B C
39 Manikkam Piranavan 5A 3B S
40 Nagulanantham Sujiganth 5A 2B 2C
41 Thanabalasingam Yathursha 5A 2B 2C
42 Segakunanathan Subethiga 5A 2B 2C
43 Sivanatham Mathumitha 5A 2B 2C
44 Shanmugavadivel Niluxsy 5A 2B 2C
45 Krishamoorththy Printhavan 5A 2B C S
46 Kulendramohan Thaksha 5A 2BC S
47 Somasuntharam Kokul 5A B 3C
48 Suthanthiran Banusha 5A B 3C
49 Singkarasa Thushyanthan 5A B 2CS
50 Subramanijam Pavasika 5AB 2CS
51 Amirthalingam Niveka 5A 2C 3S

# எமது நோக்கு

மரம் கனிகளால் அறியப்படுவது போல ஆசிரியர்களும் மாணவர்களால் அறியப்படுவர். எனவே நல்லாசிரியர்களும், நன்மாணவர்களும் எமது சமூகத்தின் அழியாச் சொத்துக்களாவர். கல்லூரி மாணவர்களின் பண்பாட்டு நடத்தைகளும், பற்றுறுதியான கற்றற் செயற்பாடுகளும் வையத்தில் அவர்களை முந்தியிருக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை. ஆற்றலும், அறிவும், அடக்கமும், நேர்மையும், அன்பும், அறனும் கைவரப் பெற்ற மாணவர்களால் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் பெருமைபெறுகின்றார்கள். அதே குணவியல்புகளைத் தழுவிநின்று பாரபட்சமற்ற முறையில் மாணவர்களை அர்ப்பணிப்புடன் பயனுள்ள கனிகளாக உருவாக்குகின்ற ஆசிரியர்கள் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றார்கள். இவற்றிற்கு அடிப்படையாக அமைவது சத்தியத்துடனான வாழ்க்கையாகும். இன்றைய சமகாலவுலகில் நவீன தகவற்றொடர்புச் சாதனங்களின் பொருத்தமற்ற கையாளுகை, தேவைப்படும் வழிகாட்டுதல்கள் கிடையாமை, அன்புடனான அரவணைப்புக் குறைபாடுகள், ஆசிரிய - மாணவர்களுக்கிடையிலான புரிந்துணர்வின்மை, வாழும் சமூகத்தின் அக்கறையின்மை முதலான பல காரணங்களால் மாணவர்களின் ஒழுக்கம் சம்பந்தமான பல்வேறு குற்றச் சாட்டுகள் நாளொரு வண்ணமாகப் பத்திரிகைச் செய்திகளாக வந்த வண்ணமிருக்கின்றன. கீழ்ப்படிவின்மை, போதைப்பொருட்பாவனை, குழுமோதலக்ள், வன்முறையில் ஈடுபாடு, பாலியல் வக்கிரச் சேட்டைகள், சமூகவிரோதச் செயல்களில் ஈடுபாடு முதலிய ஒழுங்கீனங்கள் பாடசாலை மாணவர்களிடத்தும் இளைய தலைமுறையினரிடத்தும் குடிகொண்டிருப்பது ஒரு இனத்தின் - சமூகத்தின் பேரழிவுக்கும், பண்பாட்டு அழிவிற்கும் வழிவகுப்பதாகும். மறுதலையாக ஆசிரிய சமுதாயத்திலும் இத்தகைய வாழ்வியற் கோலங்கள் ஊடுருவி அவர்களையும் அவர்கள்சார்ந்த சமூகத்தையும் அரித்துக் கொண்டிருப்பதையும் ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன.

எனவே ஆசிரிய - மாணவ சமூகமானது பழைமையின் தோள்களில் ஏறி நின்று புதுமையை வரவேற்பதாகவும், எமது இனத்தின் - சமூகத்தின் ஒழுக்க நியமங்களைப் பேணுவதாகவும், எமது இனத்தின் - சமூகத்தின் ஒழுக்க நியமங்களைப் பேணுவதாகவும், மனிதத்துவத்தை மதிப்பதாகவும், கல்லூரி அன்னையின் மாண்பினை உயர்த்துவதாகவும் t ßqFj y;N z Lk;"ஒழுக்கமில்லாத கல்வி ஒட்டகத்தின் மீது ஏற்றி வைக்கப்பட்ட புத்தகத்துக்குச் சமானம்" என்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருவாக்கினை உணர்ந்து நடப்பவர்களாக நாம் என்றும் உயர்வோமாக.

-மலர்க்குழு-

♦ **ஆலோசனையும் வழிகாட்டலும்:**



**திரு ந.சர்வேஸ்வரன்.(அதிபர்)**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**



**திரு ந. பாலச்சந்திரன்**
**பிரதி அதிபர்**
**நிர்வாகம்**



**திரு.த.பாலசண்முகநாதன்**
**பிரதி அதிபர்**
**கல்வி அபிவிருத்தி**

♦ **மலர்க்குழு :**

♦ **ஆசிரியர்கள்**



**திரு.ந.அகிலன்**
**(தமிழ்)**



♦ **திருமதி.த.கிரிசாந்**
**(ஆங்கிலம்)**



♦ **கணனி வடிவமைப்பு.**
**திரு. ஆ.வைகுந்தன்**



♦ **கணனிப்பதிவு:**
**திருமதி க.நளாயினி**

**அனுசரணை :- திரு/திருமதி செல்வராணி செல்வராசா** (ஓய்வு நிலை பிரதி அதிபர்)
**தடம் வெளியீட்டு நிதியம்.**

**TO,** ......................................................
......................................................
......................................................

**FROM , PRINCIPAL,**
**J/CHAVAKACHCHERI**
**HINDU COLLEGE**
**CHAVAKACHCHERI**
T.P NO. 021 2270350 /201 227 0351
**Web.WWW.ChC.sch.lk**